**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 374 of 2010**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : பழனியம்மாள்** | **Father/Husband's Name : சின்னசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 02.07.2025.**

**A2 died. A1, A7 present. A3, A4, A5, A6 absent. 317 Cr.P.C. PFA.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தெற்கு தாதநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் நான் தான் கைரேகை வைத்தேன். 10ம் தேதி சுமார் 17 வருடங்களுக்கு முன்பு எனது காட்டில் வந்து தட்டை பயறு வெள்ளாமையை டிராக்டர் மூலம் அளித்தார்கள். எனது தோட்டத்தில் நானும் எனது மருமகள் பிரேமாவும் தான் இருந்தோம். தங்கமாளும், விஜயாவும் வந்து எனது முடியை பிடித்து முதுகில் அடித்தார்கள். என்னை முதலில் அடித்தார்கள். அதற்கு பிறகு எனது மருமகளை அடித்தார்கள். ஆஜர் எதிரிகள் டிராக்டரில் வந்து அடித்தார்கள். தங்வேல், மூர்த்தி ஆகியோர் ஆஜர் எதிரிகளுடன் டிராக்டரில் வந்து வெள்ளாமையை அழித்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் குமார் மற்றும் பரமன். பரமன் ஒன்றும் செய்யவில்லை. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. காவல் நிலையத்தில் இருந்து Memo தந்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பழனி அரசு மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.07.02 17:23:25 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 374 of 2010**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : பிரேமா** | **Father/Husband's Name : தங்கராஜ்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 02.07.2025.**

**A2 died. A1, A7 present. A3 split up. A4, A5, A6 absent. 317 Cr.P.C. PFA.**
**முதல் விசாரணை**

**1. நான் தற்போது தெற்கு தாதநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் குமார் மற்றும் பரமன் ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகள் தங்கம்மாள், விஜயா, தங்கவேல், மூர்த்தி ஆகியோர்களை எனக்கு தெரியும். அ.சா.1 பழனியம்மாள் எனது மாமியார். 10.04.2008 ம் தேதி சுமார் பகல் 12.00 மணியளவில் நானும் எனது மாமியாரும் தோட்டத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகளும் தங்கம்மாள், விஜயா, தங்கவேல், மூர்த்தி ஆகியோரும் தட்டபயிறு காட்டுக்குள் அழிமானம் செய்ய வந்து காட்டை அளித்தார்கள். அதற்கு பிறகு எனது மாமியார் என்ன என்று கேட்ட போது எனது மாமியாரை அடித்து விட்டார்கள். நான் என் மாமியாருக்கு பின்னால் சென்றதால் தங்கம்மாளும், விஜயாவும் என்னை தள்ளிவிட்டார்கள். எனது மாமியாரை முடியை பிடித்து இழுத்து முதுகிலும், வயிற்றிலும் தங்கம்மாளும், விஜயாவும் அடித்தார்கள். மற்றவர்கள் எனது மாமியாரை எட்டி உதைத்தார்கள். மூர்த்தி , தங்கவேல் , பரமன் ஆகியோர் சண்டை நடந்து கொண்டிருந்தபோது டிராக்டர் மூலம் காட்டை அழித்தார்கள். ஏற்கனவே குமாரும், பாஸ்கரும் பாதை பிரச்சனை சம்மந்தமாக பாதை கேட்டு சண்டை போட்டார்கள். அதற்கு எனது மாமனார் சின்னசாமி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. பின்னர் எனது மாமனார் இல்லாத சமயத்தில் தோட்டத்தில் வந்து மேற்படி எதிரிகள் எனது மாமியாரை அடித்து, என்னையும் அடித்து கீழே தள்ளினார்கள். பின்னர் எனது மாமனாரும், மாமியாரும்**

அடுத்த நாள் காலை தாலுகா காவல் நிலையம் சென்று புகார் அளித்தார்கள். பின்னர் பழனி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சைக்கு சேர்ந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.07.02 17:23:34 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 374 of 2010**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : வேலுசாமி** | **Father/Husband's Name : முத்துசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 02.07.2025.**

**A2 died. A1, A7 present. A3 split up. A4, A5, A6 absent. 317 Cr.P.C. PFA.**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது தெற்கு தாதநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் குமார் மற்றும் பரமன் ஆகியோர்களை எனக்கு தெரியும். தங்கம்மாள், விஜயா, தங்கவேல், மூர்த்தி ஆகியோர்களை தெரியும். அ.சா.1 பழனியம்மாளை எனக்கு தெரியும். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. சுமார் 10 – 12 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகள் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் பழனியம்மாளிடம் பேசி தீர்த்து கொள்ளுங்கள் என்று சொன்னேன். நான் கூட்டமாக இருந்தபோது தான் அங்கு போனேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.07.02 17:23:42 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 374 of 2010**

**Deposition of Witness P. W.4**

| | |
|---|---|
| **Name : ஸ்ரீரங்கன்** | **Father/Husband's Name : ராமசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 02.07.2025.**

**A2 died. A1, A7 present. A3 split up. A4, A5, A6 absent. 317 Cr.P.C. PFA.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தும்மலப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். 11.04.2008 ம் தேதி அன்று காலை 11.00 மணியளவில் ஏற்கனவே பயிரை அழித்த இடத்தில் போலிசார் படம் வரைந்து எழுதினார்கள். அதில் நான் முதல் கையொப்பம் செய்தேன். சின்னபாண்டி இரண்டாவதாக கையொப்பம் செய்தார். அந்த சின்னபாண்டி தற்போது உயிருடன் இல்லை. பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.07.02 17:23:49 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**